5th August 1966]

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) ரெங்கராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் 18—12—1961 தேதியிட்ட அதன் கடிதத்தில் கண்டுள்ளபடி கோடம்பாக்கத்தில் சங்கம் வாங்குவதற்காக விலை பேசிய 53/1, 54/2, 84, 85/1, 85/2 சர்வே எண் நிலங்களை மாநில வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்வதினின்றும் நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இந்த வேண்டுகோளை மாநில வீட்டு வசதி போர்டின் தலைவர் நகர அமைப்புத் துறை இணை நெறியாளருடன் கலந்து ஆலோசித்தார். கோடம்பாக்கம்-புதூர் (பாகம்-2) வீட்டு வசதித் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்படுவதினின்றும் இந்த நிலங்களுக்கு விலக்கு அளிக்க முடியாதென்றும், நிலம் வழங்குவது குறித்த விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவிப்பு வெளியிடப் படும்போது அப்பகுதியில் மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்கு மாறு வேண்டி சங்கம் மாநில வீட்டுவசதி வாரியத்தின் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாமென்றும், சங்கத்திற்கு மாநில வீட்டு வசதி போர்டு தலைவர் தெரிவித்துள்ளார். சங்கத்திடமிருந்து இது குறித்து விண்ணப்பம் வந்தால் அதனை மாநில வீட்டு வசதி போர்டு முறைப்படி ஆலோசிக்கும்.

திரு. து. ப. அழகமுத்து: இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தார் தாங்கள் விலை பேசி அட்வான்ஸ் கொடுத்த நிலத்தை வீட்டுவசதி போர்டார் கேட்பது சரியல்ல என்று சர்க்காருக்கு விண்ணப்பித்து, ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் அவர்களுக்குப் பதில் கொடுக்கவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள், விண்ணப்பித்துக் கொண்டால் பரிசீலிக்கப் ட்டும் என்று கூறுகிருர். இதில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: ஏற்கனவே பதில் கொடுத்திருக்கிருர்கள். என்ன விண்ணப்பித்தார்கள் என்று சொன்னுல்—ஹௌசிங் போர்டிலிருந்து வீடுகள் கட்டும்போது அதில் ஸைட்ஸ் வேண்டு மென்று கேட்டால் அது சம்பந்தமாக உதவி செய்யலாம் என்பது தான்.

விவசாய நிலங்களை வீடுகட்டு மனைகளாக்கத் தடை

* 114 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சென்னை மாநகரிலும் மற்றும் பெரிய முனிசிபல் நகரங்களைச் சுற்றியுமுள்ள விவசாய நிலங்கள், வீட்டு மனைகளாக்கப்பட்டு விற்கப்படுவதைத் தடை செய்யும் வகையில் அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. பூ. கக்கன்: தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறை 1964 ஏப்ரல் 3-ம் தேதியன்று வெளியிட்ட 1949-ம் எண் அரசாங்க ஆணையில், வீடு கட்டுவதற்காகவும், வேளாண்மை

[5th August 1966

அல்லாத பிற காரியங்களுக்காகவும் நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வழக்கம் தவிர்க்கப்படவேண்டும் என்றும், நன்செய் நில ஆர்ஜிதம் தவிர்க்க முடியாதவிடத்து, ஒவ்வொரு விஷயத்திலும் அரசாங்கத்தின் திட்டவட்டமான அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. கலெக்டர்களும், மாநில வீட்டு வசதி வாரியத்தின் தலைவரும் கூடிய வரையில் இந்த ஆணைகளை அனுசரித்து நடக்கின்றனர். புன்செய் நிலங்களும் நெடுங்காலமாகத் தரிசாகக் கிடக்கும் நிலங்களுமே கூடிய வரையில் வீட்டு வசதித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னையைச் சுற்றிலும் கிட்டத்தட்ட ஸ்ரீபெரும்புதூர் வரை இப்படிப்பட்ட நன்செய் நிலங்கள் இருக்கின்றன. அவை வீட்டு மனைகளாக்கப்பட்டு பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு, அவர்கள் எல்லாவற்றையும் விற்று வீடு கட்டுகிற நிலையில் தடுக்கப்படுமா ? அல்லது இப்படி விளம்பரம் செய்யப்பட்டு விற்பனைக்கு வரும் என்று அறிவிக்கும்போது இவைகள் எல்லாம் தடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வீடு கட்ட எடுக்க வேண்டுமென்று சொன்னால்—

(1) whether the lands are situated within the municipal limits;

(2) whether the lands are wet lands and if so, the extent of such wet lands and the crop or crops raised thereon ; and

(3) the number of pattadars affected by the acquisition.

இதையெல்லாம் கேட்டுக் கலெக்டர் அபிப்பிராயத்தைத் தெரிந்த பின்தான் செய்கிறார்கள். அரசாங்கம் 1965-ல் ஒரு முடிவு எடுத்திருக்கிறது. விவசாய நிலங்களைப் பாதிக்கக் கூடிய முறையில் விவசாய நிலங்களை வீடுகள் கட்ட எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : அமைச்சர் அவர்கள் தருகிற தகவல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும், எப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வகையில் அமைந்திருக்கிறது. தனிப்பட்டவர்கள் நன்செய் நிலங்களை வாங்கி அவற்றை மனைகளாக ஆக்கி விற்கிற முறையில் சென்னையிலிருந்து கிட்டத்தட்ட நாற்பது மைல் வரை நான்கு பக்கங்களிலும் இன்றைய தினம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதைத் தடுக்கிற வகையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

5th August 1966]

திரு. முனு ஆதி : நன்செய் நிலங்களை வீடு கட்டும் மனைகளாக மாற்றக் கூடாது என்று மாநிலம் பூராவும் ஒரு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூடுமான வரையில் ஹௌசிங் போர்டார் எடுக்கவில்லை. நன்செய் நிலங்களை அப்படி எடுப்பது நல்லதல்ல, உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்க எண்ணம் நல்ல எண்ணம் தான், நன்செய் நிலங்களை வீடு கட்டும் மனைகளாக மாற்றக் கூடாது என்பது. அதனால் நஷ்டம் அடைபவர்கள் அரசாங்கமும், பொது மக்களும்தான். அரசாங்கத் திட்டத்தின் கீழ் நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். அப்படிப் பட்ட நிலங்களின்மேல் அந்த நிலச் சொந்தக்காரர்கள் கூட அல்ல, ஸ்பெக்குலேட்டர்ஸ்—எல்லா ஜில்லாக்களிலும் இப்படி இருக்கிறது —பணத்தைப் போட்டு அவற்றை மனைகளாகப் பிரித்து அதிகமான விலைக்குக் கொடுப்பதினால் அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரதேசங்களில் விதிகளைத் தளர்த்தி அரசாங்கமே 'பல்க் அக்விசிஷன்', பெருமளவிற்கு நில ஆர்ஜிதம் செய்யக் கூடிய முறையில் வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் நன்செய் புன்செய் என்ற வித்தியாசம் இல்லாமல் நகரத்தின் விஸ்தரிப்புத் தேவையை முன்னிட்டு நில ஆர்ஜிதம் செய்வதற்குள்ள யோசனையை அதிகாரிகளுக்கு வழங்குவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : உணவு உற்பத்தி கெட்டுவிடக் கூடாது. அதுதான் முக்கிய நோக்கம். தனிப்பட்டவர்கள் தங்கள் தங்கள் நிலங்களை நகரத்தின் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அதிகமான விலைக்கு விற்று விடுகிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்கும் வந்திருக்கிறது. அவர்கள் விற்றுவிடுகிறார்களே, அதை ஹௌசிங் போர்டு எடுக்கலாமா என்று யோசனை செய்தோம். எதற்கும் பரிசீலனை செய்துதான் பதில் தெரிவிக்கவேண்டும்.

விவசாயப் பள்ளி மாணவர்கள்

** 115 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டிலுள்ள விவசாயப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தொகை என்ன, மாவட்டவாரியாக ?

(இ) அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் என்னென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) : A statement[a] is placed on the table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும் சேர்ந்து ஒரு பள்ளி இருக்கிறது. அப்படியில்லாமல் மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும் தனித்தனியாக பள்ளி வைக்க முயற்சி எடுக்கப்படுமா ?

---

[a] Printed as Appendix II on pages 586–587.